




ஓலை 178| ஓசை 301| ஜூன் 2026

# அகர முதல இலக்கியப் பேரவை



## ஜி. யு. போப்

## கவிதை வார இதழ்

தமிழ்ப்பணியில்...

அகர முதல இலக்கியப் பேரவை [ ம ] சிவம் அறக்கட்டளை

# திருக்குறள்

## குறள்

பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு

## பொருள்

பற்றுகள் இல்லாதவனாகிய இறைவனுடைய பற்றை மட்டுமே பற்றிக் கொள்ள வேண்டும்; உலகப் பற்றுகளை விடுவதற்கே அந்தப் பற்றைப் பற்ற வேண்டும்

அகர முதல இலக்கியப் பேரவையில் இணைய
9597887847

அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

## நிறுவனர்

**செல்வமுத்துகுமரன் குணசேகரசிவம்**

## ஆசிரியர்கள்

**அ.வில்சன்**
**குமர.தர்மசீலன்**

## வடிவமைப்பு

**ச.சூர்யா, அ.வில்சன்**

## அலுவலக முகவரி

97, குஞ்சிதபாதம் நகர்,
டவுன்ஸ்டேஷன் தென்புறம்,
மயிலாடுதுறை-609001.

# அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

விண்வெளியை ஆய்ந்தறிந்த அறிவியல்சீர் தமிழே!
விண்வெளியைத் தாண்டுகிற ஆற்றலுடை தமிழே!
வெண்ணிலவில் நடைபயின்ற மறவமிது தமிழே!
விடிவெள்ளி தாரகையாய் ஒளிர்கின்ற தமிழே!
மண்ணுலகை கட்டியாண்ட மாப்புகழின் தமிழே!
மண்ணுலகின் மொழிக்கெல்லாம் தாயானத் தமிழே!
மண்ணுலகை ஐந்திணையால் அளந்தாண்ட தமிழே!
எண்ணற்ற இயல்நிறைந்த எந்தமிழே வெல்க!




கார்முகிலாய் அறிவுமழைப் பொழிகின்ற தமிழே!
குற்றால அருவியாக அறவாழ்வைக் கொட்டும்
சீர்குறளை இயல்பான பொதுவுடமை ஏற்று
சித்தரவர் பகுத்தறிவாய் இயங்குகிற தமிழே!
கூர்மழுங்காப் பகைவரையும் அரவணைக்கும் தமிழே
குணம்நிறைந்து மாந்தநேயம் ஊட்டுகிற தமிழே
பேர்பெற்ற எழுகடலின் அகலஆழம் விஞ்சும்
பலசுரங்கம் நிறைந்திளங்கும் பைந்தமிழே வெல்க!




கோள்களோடும் கலைகளோடும் கலந்திருக்கும் தமிழே
காற்றினைப்போல் வையமெங்கும் நிறைந்திருக்கும் தமிழே!
கோள்களெல்லாம் இணைந்தபோதும் உனக்கிணையோ தமிழே?
கோலூன்றித் தடுமாறும் மொழிகளுக்கும் நீயே
மாள்வதற்கே விட்டிடாமல் உயிர்கொடுத்த தமிழே!
மன்னர்கள் வளர்த்ததினால் மாண்புகொண்ட தமிழே:
ஆள்கின்ற வலிமையாலே உலகாண்ட தமிழே!
அய்ம்பூதம் அடக்கியாளும் ஆளுமையே வெல்க!

நெருப்பலைப் பாவலர் இராம. இளங்கோவன்

பாவகை : எண்சீர் விருத்தம் (விளம் + விளம் + விளம் + காய்)

நல்லதைக் காட்டிட
நன்னயம் பெற்றிடவே
நல்லவர் நட்பினால்
நாணயம் நல்கிடுமே

அல்லதை நீக்கியே
ஆசினைப் போக்கிடுமே
அஞ்சலர் ஓட்டிட
அற்றமும் கெட்டிடுமே.

மல்லலைக் கூட்டுமே
மல்கிடும் புத்துணர்வே
மல்லையும் கிட்டுமே
மள்ளலை ஊட்டிடுமே

வல்லுதல் தோன்றியே
வல்லையும் சேர்க்குமே
வல்லமை கொண்டதால்
வல்லுனர் போற்றுவரே



கவிஞர் செ. கலைவாணி

# சாமியாடி


சற்று நேரத்தில்
அவளுக்குள்
இறங்கப் போகிறது சாமி.
அத்தருணம்
அவளுக்குள்ளும்
உழன்றபடி இருக்கிறது.
கேள்விக் கணைகளோடும்
கோரிக்கைகளோடும்
கூட்டமாய்க் குவிந்தபடி
மக்கள்.
கைக்குவித்து பக்தர்கள் நிற்க
கடவுளாகிறாள்
கன்னிப்பெண்.
விளக்கங்களும் பரிகார
பரிவர்த்தனைகளும் பகிராமல்
மலையேறுவதில்லை அவள்.
அவளுக்குள் இறங்கி
அருள்வாக்கு சொல்லும் சாமி
இந்த வாக்கைத்தவிர
அவளுக்கென்று
ஒரு வாக்கையும் சொல்லவில்லை.
அவளுக்கென்று யாரும்
சாமியிடம் வாக்கு கேட்கவுமில்லை.
சாமியாடி சாமியாடி
இருந்து கொண்டிருக்கிறாள்
இன்னமும்
முதிர்க்கன்னியாகவே அவள்.



கவிஞர் பாரியன்பன் நாகராஜன், குடியாத்தம்

# இயக்குநர் இமயம் பாரதிராஜாவுக்கு அஞ்சலி!

இயக்குனர் இமயமே! ஏன் மறைந்தாயோ?
வியத்தகு சாதனைகளை படைத்தவன் நீயன்றோ?
திரைப் படங்களின் முகவரியை மாற்றிய மாமனிதா!
மண்ணின் மணங்களை, மக்களின் குரல்களை,
எளிய மனிதர்களின் வாழ்வியலை எதார்த்தமாய்ப்
பதிவுசெய்ய இடம் பெயர்ந்தது திரையுலகம்
கிராமத்துத் தெருக்களுக்கு! காடுகளை, பசுமையான
கழனிகளை,புழுதி பறக்கும் சலைகளை
கவின்மிகு இயற்கையை, படப்பிடிப்பில் அள்ளிவந்து
கலையின் மொழியில் காட்டினாய் உலகிற்கு!
எளிய மனிதர்களின் வாழ்வியல் சாட்சியங்கள்!
நிலங்களின் கருப்பொருளை ஆழமாய்ப் பதியவைத்தாய்!
சிவப்பு ரோஜாக்களில் முட்களைக் காட்டினாய்!
காதலைப் போற்றியது "அலைகள் ஓய்வதில்லை!"
முதிர்ந்த வயதிலும் முகிழ்க்கும் அன்பினை
முதல் மரியாதை தெளிவாகக் காட்டியது!
நடிகர் திலகத்திற்கு புதியதொரு கோணம்!
உறவுமுறைச் சிக்கல்களை ,குடும்பப் பகைகளை
உணர்வு பூர்வமாய் உரைத்தது கிழக்குச் சீமையிலே!
"கடலோரக் கவிதைகள்" காவியமாய் இன்றளவும்!
புயலெனப் புறப்பட்ட புதுமைப் பெண்ணும்,
சிசுக்கொலைச் சீரழிவைச் சாடிய கருத்தம்மாவும்
பெண்ணுயர்வைப் போற்றிய பெருங் காவியங்கள்!
மண்ணின் மணத்தை திரையில் விதைத்த
மாமனிதரே! காலத்தின் பக்கங்களில் அழியாத
காவியமாய் இருந்திடுவாய் நீயென்றும்! ஐயமில்லை!,
எத்தனை படைப்புகள்! அத்தனையும் முத்துகள்!
எண்ணற்ற நினைவுகளை எங்களுக்கு அளித்தாயே!
இயக்குநர் இமயத்திற்குக் கண்ணீர் அஞ்சலி!



கவிஞர் ஏ. சீ. சேஷாத்ரி

# கொலுசு

அவள் கால்களை தழுவி
செல்லும் அன்பின்
அலையோசையாய்

அவளின் சிணுங்கல்கள் காலின்
வழியே முத்துக்களின்
முனகல்களாய்

அவளது காதல் மொழிகளின்
அரிச்சுவடியில் கொலுசின் சத்தம்
சங்கீதமாய்

அவளின் வருகையை
மணியடித்து சொல்லும் ராகத்தின்
மெட்டுக்களாய்

கொலுசு காதல் வழிகளில்
கொஞ்சும் சலங்கையின்
வீணை மீட்டும் விசித்திரங்களாய்



கவிஞர் ரா. பிரேம் சுரேஷ், கோத்தகிரி


[1]
பற்றை விடு என்ற
பற்றற்ற துறவியின் பத்து
விரல்களிலும் பளபளக்கும் மோதிரம்

[2]
வெறுப்பில் சுருங்கும் மனம்
மறுப்பில் மறைந்த நினைவு
சருகாய் காற்றில் பறக்க

[3]
ஓலை குடிசையின் ஓட்டைகளுனூடே
வெள்ளி காசின் சிதறல்
ஒட்டிய வயிற்றின் பசியாற்றுமா

[4]
பொய்கள் மெய்யாக திரிய
மெய்கள் மெய்யாகவே திகைக்க
புரட்டுகள் மெய்யும் பொய்யுமாய்

[5]
முள்ளில் விழுந்த பட்டம்
பட்டம் காற்றின் வீச்சில்
மேலேறும் ஜாலம் காட்டும்



கவிஞர் சசிகலா விஸ்வநாதன்

மரிக்கொழுந்து வாசத்திலே
மாமனவன் நேசத்திலே
சித்தகத்திக் கண்ணழகி
சிற்றிடைப் பெண்ணழகி

தள்ளாடும் தாமரையே
தழும்புது எம்மனமே
தாமரைப்பூக் கொண்டக்காரி
தளதளப்பான மேனிக்காரி

பிச்சிப்பூ சிரிப்பழகி
பின்னலிடை அசைந்தாடுதே
மனசும் கெறங்குதடி
மானே ஒன்னழகிலே

ஆசையும் கூடுதடி
அள்ளியே அணைக்கத்தான்
வட்டப் பொட்டுக்காரி
வாளிப்பான வஞ்சியே



பரிசம் போடத்தான்
பரிதவிக்கிறேன் நானே
சம்மதம் சொல்லிடு
சஞ்சலத்தைப் போக்கிடு

நல்லநாளும் பாக்கலாம்
கண்ணாலாம் பண்ணிக்கலாம்
மல்லிகைத் தோரணத்தில்
மணவாழ்க்கை தொடங்கட்டுமே


கவிஞர் ப. வெங்கட லட்சுமி காந்தன், விருதுநகர்

# சிறுக்கி!

சிக்கெடுத்துச் சொருகி -நெஞ்சைச்
சிக்க வைத்தாள் சிறுக்கி
பக்கக் கொண்டை போட்டு -அதிலே,
பதுக்கி வைத்தாள் அமுக்கி

மின்னும் வளையல் ஆட்டி -என்னை
மிதக்க விட்டாள் சிலுப்பி
கண்ணின் கதிரை அனுப்பி -என்னுள்,
கொள்ளி வைத்தாள் நிறுத்தி



கள்ளத் தனத்தில் முக்கி -என்னைக்,
குளிர வைத்தாள் போர்த்தி
அள்ளித் தின்னச் சொல்லித் -தன்னை,
அமுத மாக்கி நிறுத்தி

பின்ன லினால் கட்டி -என்னைப்
பிடித்துச் சென்றாள் நடத்தி
மின்னும் கன்னம் உரசி -என்னை,
முத்த மிட்டாள் உசுப்பி

சுழிச்சி உதடை மடிச்சி -முகத்தை
சுயம்வரத்தில் நிறுத்தி
கிழிச்சி நெஞ்சை கசக்கி -கொடியில்
காய வைத்தால் துவச்சி

அன்பு இருக்கை பொருத்தி -அவளில்
ஆடுகின்றேன் சொக்கி
மன்ற மதில் நிறுத்தி - மாதை
மணம் செய்வேன் உயர்த்தி

கவிஞர் திருமதி. இரா. இராஜாமணி, ஈரோடு

# செவிலியர்



மருத்துவ குணத்தில் மட்டில்லா மகிமை
சுருக்கமாய் செய்யும் சுதந்திர பறவையே
கடமை உணர்ச்சியில் கருத்தாய் திகழும்
உடனாக பிறவா உரிமையின் சின்னமே

வேளைக்கு மருந்தை வேண்டியளவு தருபவரே
களைப்பை போக்கும் கருத்தான நட்பே
சுகத்தை அளிக்க சுகமே மறந்த
இகத்தில் உயர்ந்த இன்னிசை மலரே

குடும்ப உறவில் குலமாகத் திகழும்
விடுக்குமே யென்றும் விழுதா கிவரமாய்
தினமும் பணியை திறம்பட புண்ணியமாய்
மனமார்ந்த நட்பிலே மலர்ந்த நல்லுறவே

காத்திருந்த கடமையில் காவலான பண்பே
பூத்திருந்த வளமாக புவியிலே உயர்ந்ததே
சொர்க்க யுலகமாய்ச் சொல்லிட வரமாய்
வர்க்க களமான வந்தனைச் செவிலியே

நோயாளி மனதினை நோகாமல் காக்கும்
சேயாகி அரவணைக்கும் சேர்ந்தநல் குணமே
சிந்தை முழுதும் சிறக்குமே வேலையில்
தந்தையாய்க் காத்திடும் தன்னிகரில்லா உறவே

அல்லும் பகலும் அயராமல் பார்த்திடும்
சொல்ல முடியாத சொர்க்கத்தின் வாசலே
மருத்துவர் அளிக்கும் மருந்து வகைகளை
கருத்தாக வழங்கும் கண்ணிய உயிரே

குடும்பம் காக்க குலவிளக்காய்த் திகழும்
விடுக்கும் செய்தியும் விந்தைச் சுகாதாரமே
சுத்தம் நம்மையும் சுற்றம் சூழ்ந்தோரையும்
வித்தாகி காக்கும் வியப்பான எதிர்காலமே

கவிஞர் பி. அன்பழகன், கடலூர்

# வெயிலின் கோபம்

கொளுத்தி நிற்குதே
கொஞ்சம் கூட இரக்கமற்ற
வெறுப்பு ஏற்றி நிற்கும் வெயில்!
□ □ □ □




தீவு நாடு என்றுதான் பெயர்
தீயால் ஐயா கருகி நிற்கிறதே
இல்லை... இல்லை.....
ஆதவனுக்கு இருக்க பிடிக்கவில்லை
அகிலத்தில் நடக்கும் அக்கிரமங்கள்
அனலாய் பூமியில் நெருங்கி விட எத்தனித்தான்!

"குடி..... குடி...." வாசகங்கள்
குடி குடியைக் கெடுக்கும்
நாள்தோறும் நா தேடிடும் அளவுக்கு குடித்தாலும்
நா வரண்டு தவிக்கிறது
தண்ணீர் கேட்டு!

அதிகபட்சம் இங்கே
யாவருக்கும் ஓர் அனலான நீதி
ஏழை - பணக்காரன்
ஆண் - பெண்
சிறியவர் - பெரியவர் பேதமில்லை
வெளுத்து கட்டுது!

குளிரூட்டிக்குள் வாழ்ந்தவருக்குப் புரியும்
இன்று நான்படும் இன்னல்
நாள்தோறும் கூலி வேலை செய்யும்
ஒவ்வொருவருக்கும்
இப்போ மட்டுமல்ல எப்பவும்தான் என!

பாடசாலை வேலைத்தலங்கள் வீதியோரங்கள்
வியர்வை வழிந்தோட மனிதர்கள்
நின்றிடும் பரிதாபங்கள்
மூச்சும் முட்டுதே!

காலை - மாலை இல்லை
காலம் சொல்லிடும் இன்றைய காலநிலை
என்று யாரும் கூற முடியாது
எதிர்பார்த்திடா மாற்றம் இயற்கை பேசிடும்
இறுதி நாள் அண்மையில் உள்ளது என!

கவிஞர் திருமதி. ஜுவனீற்றா கிங்ஸ்லி, கல்முனை (இலங்கை)

# அதிசயம்

ஒவ்வொரு நலன்களும்
கஷ்டத்தில் இருந்துதான்
மெதுமெதுவாய்ப் பிறக்கிறது
பிறந்த நலன்கள்
தொடரும் என்பதில்
என்ன நம்பிக்கை இருக்கிறது
நாட்களுக்குள் நாம்
அறியாத பல
அதிசயங்கள் புதைந்து
கிடக்கின்ற போது?



கவிஞர் சேஹூ மொஹம்மது பெனாஸிரா, முஸ்லிம் ஹல்மில்லாவ.

# இதயமாய் நேசிப்போம்!

காலத்தால் செய்த நன்றி உலகினும் பெரிதெனப்
போற்றி வாழ்ந்த காலம்தான் பொன்னான நேரம்தான்.

இன்பமான வாழ்வு எந்நாளும் அமைந்திட
இயற்கையைப் போற்றியே வாழ்ந்திட்ட
பொன்னான காலத்தின் வாழ்வு என்றும் சிறப்புதான்.

காடு மலை ஏரியும், ஆறு குளம் கிணறென
அத்தனையும் உயிராய் நேசித்திட்ட காலம்தான்
உயிரான வாழ்வில் சுகமான காலங்கள்.



அறம் சார்ந்த வாழ்வும் அந்நியமாகிப் போனதே!
தனிமனித வாழ்வும் எந்திரமாகிப் போனதே!
அவசர வாழ்விலே எல்லாமும் இழந்தோமே!

"நாடும் வீடும் இரு கண்ணாய்"
போற்றியே வாழ்ந்த புனிதமெல்லாம்
சுயநல வாழ்வில் "புழுதியாய்" போனதே!

வாழும் பூமியே நமதெனச் சுயநலம் கொள்ளாதே!
"இதயமாய்" நேசித்தே போற்றிக் காக்க வேண்டுமே!

இயற்கையோடு இணைந்து
இனிய வாழ்வைப் பெற்றிடுவோம்!
நம் வாழ்வு புனிதமாய் நலம் வந்து சேருமே!

அத்தனை உயிரினங்களுக்கும்
எதிர்வரும் தலைமுறைக்கும்
சுகமான பூமியைச் "சொர்க்கமாய்" தந்திடுவோம்!

கவிஞர் ஜேப்பி@ பன்னீர்செல்வம், சேத்தியாத்தோப்பு

# மாறும் மனம்

வண்டுகள் தேடும் கமலம் உன்முகம்
என்றவன், ஏழை என்றதும் ஏறெடுத்தும் பாராது
கருமம் என முகத்தை முறைக்கிறான்.
சங்குக் கழுத்தெனக் கவிதை பாடியவன்,
சங்கிலி இல்லாத சங்கடக் கழுத்தென்றான்.

பொருளில்லாருக்கு இவ்வுலகம் இல்லை
என்பதைப் பழகிப் பார்த்தேன், பொருள் அறிந்தேன்!
வாழைத் தண்டெனக் கரங்கள் என்றவன்,
வெறுங்கைகள் வேண்டாமென வெறுக்கிறான்.
கண்கள் பேசும் மொழிக் காதலாம்,
இன்று பொன்கள் புரியும் மொழியானதே!



நகங்கள் விரல்களின் கிரீடம் என்றவன்,
இன்று கணையாழி அற்ற விரல்கள் விறகுகள் என்றான்.
மனம் பார்த்த பாச நேசம்,
பணம் பார்த்தே மணம் புரிகின்றது.
மாறும் மனங்களை மங்கையரே அறிந்திடுங்கள்!
உள்ளம் புரிபவனை உவகையோடு தேர்ந்தெடுங்கள்!

உண்மையுடன் வாழ்வு வளம் பெறும்.
புன்னகை ரசித்துப் பொன்னகை வெறுத்த
மனிதரைத் தேடுங்கள்!
பொய்ச் சமூகமிது, மெய்யானவரைக் காணுங்கள்!
காசுக்கு அடிமையாகாக் கணவனை
வாழ்த்தி வணங்கிடுங்கள், வளைக்கரத்தை இணைத்திடுங்கள்!

நிலைக்கும் கல்வியும் நிற்கும் நம்பிக்கையும்
எதிர்கால வாழ்வென இதயத்தில் பொறித்திடுங்கள்!
வாழ்வது ஒருமுறை, வாழ்த்தட்டும் தலைமுறை!
வருங்காலமோ உங்களின் வரையறை.
ஏமாறாதீர் இணையைத் தேர்வு செய்வதில்!

கவிஞர் ரெஜினாபானு, மேலூர்

# வாடை தேடும் வாடைக்காற்று

நீ புரண்டு நிமிர்ந்த புழுதிக் காட்டில்
உருண்டு கொள்கிறேன்
உன் ஈரத்தின் சுவடுகள் ஒரு துளியாவது
என்னில் அப்பிக் கொள்ளும் என்ற நப்பாசையில்!

நீ பறக்கவிட்ட பட்டம் ஒன்று
வெகுகாலம் கழித்து
கீழிறங்கி வந்து முகம் காட்டி நிற்கையில்
வேர் அறுந்த மரமாய்
நான் வீழ்ந்து போகிறேன்!



உன் கையின் சூட்டை
கைப்பற்றும் முயற்சியில்
என்னிடம் இறுதி முத்தமொன்றை
கதியாய் எடுத்துக்கொண்டு வானேறிச் சென்றிடும்
என் வலசை பார்வையை
என்ன செய்து தடுப்பாய் என்ற
முனை மழுங்கிய கேள்விகள்
இப்போதெல்லாம் முத்தாய்ப்பாய்
என்னிடம் தோன்றுவதே கிடையாது
ஏனெனில்
உன்னால் முடித்து வைத்த கதை இது!
அதன்பின் முகவுரை ஏது?

காலத்தின் ஞாபகத்தில்
வாடைதேடும் வாடைக்காற்றோடு
புரண்டு நிமிர்ந்து புழுதியோடு நடக்கையில்
துலக்கமாய்த் தெறிந்த ஓலை வானம்
தூரலை அனுப்பி
என்னை துடைத்து விட்டது
வழியாத சோகத்தை உன் வாடையின்றி!

கவிஞர் யாழிசைசெல்வா, தேனி மாவட்டம்

# நன்றி மறந்தவர்கள் விலகட்டும்



கலங்க வேண்டாம்
கடந்து செல்லவும்.
கவலை கொல்லவும்.
காரியவாதிகளைக் கண்டு.

உதவி என்று கதறியவர்கள்
உயர்ந்ததும் உதறியவர்கள்.
உதவியவரை குதறியவர்கள்.
விலகட்டும் விடை கொடுங்கள்.

ஐந்நூறு ஆயிரம் கோடி ஆனதும்
அகிலமே தம் காலடி என்பார்கள்.
பம்பரத்தின் ஆட்டம் சிறிது
நேரம் தான் என்று
படைத்தவனுக்கு தெரியும்.
பணம் வந்ததும் நன்றி மறந்த
இவர்கட்கு எப்படி புரியும்?

காரியம் முடிவதற்காக
சகோதரன் என்பார்கள்.
காரியம் முடிந்ததும்
சண்டாளன் என்பார்கள்.
தேடி வந்து சிரிப்பார்கள்.
தேவை முடிய எரிப்பார்கள்.
சுதந்திரமாக பேசுவார்கள் - பின்
தந்திரமாக வீசுவார்கள்.

கணிதம் படித்தார்கள்.
மனிதம் படிக்கவில்லை.
நட்பின் புனிதம் தெரியாதவர்கள்.

மனைகளை வாடகைக்கு
விட்டால் லாபம்.
மனசாட்சியை வாடகைக்கு
விட்டால் சாபம்.
விலகட்டும்
விடை கொடுங்கள்.
நன்றி மறந்தவர்க்கு..
நாளைய உலகம்
அவர்களை தண்டிக்கும்.
மன்னிப்புக்காக
கை ஏந்தும் போது
காலம் அவர்கள் அலைபேசி
எண்களை துண்டிக்கும்.

கவிஞர் முனைவர். அ. சீ. மு. முனியாண்டி

# நகராத நதிகள்

நெஞ்சைவிட்டு நினைவைவிட்டு
நகராத நீங்காதநதிகள் ஓர் வரம்
காவிரியாற்றின் கிளைநதியான
குடமுருட்டியாறு அதில் ஒன்று

இரண்டு பக்கமும் வயல்வெளி
மாந்தோப்பு, காய்கறித் தோட்டம்
இரண்டு கிராமங்கள் இருபுறமும்
பலநூறு ஏக்கர் பாசன வசதி

இதை ஒட்டிய சிறுஊர்களுக்கும்
உதவிக்கரம் நீட்டும் நதியிது
ஆளுனர் ஒருவர் பலவருடம்
முன்பு திறந்திட்ட நீண்ட பாலம்

ஊர்களை இணைக்கும் ஒப்பற்ற
செயலினைச் செய்து வருகிறது
அணையில் நீர் திறந்துவிட்டால்
நுங்கும் நுரையுமாகப் பொங்கி

பிரவாகமாய் ஓடிவரும் அழகு
பி.டி.உஷாவுக்குப் போட்டிதான்
பாலத்தின் மேலிருந்து ஆற்றில்
குதித்து சுழலில் சுற்றுவது

நேரம்போவதே தெரியாமல்
நண்பர்களுடன் விளையாடுவது
அப்பா மிதிவண்டியில் வருவதை
கண்டு வீட்டுக்கு ஓடிவருவதென



கடந்தகாலத்தின் பொன் நாட்கள்
மீண்டும் வராத மனச்சித்திரம்
இஞ்சியையும் மஞ்சளையும்
கொஞ்சி விளையாட வைத்து

நெற்பயிரை பாசநேசத்துடன்
பக்குவமாக அணைத்து வைத்து
தமிழக நெற்களஞ்சியமிது என்ற
பெயரைப் பெற்றுத் தந்ததே


மாடுகட்டிப் போரடிக்காது இங்கே
யானைகட்டி போரடிக்க வைத்த
குடமுருட்டி நதியின் பெரும்புகழ்
நெஞ்சைவிட்டு நாகரவே நகராது

கவிஞர் கி. சுப்பிரமணியன், அடையார்

குடிசை வீடு
ஒழுகுகிறது
ஓட்டைப் பாத்திரம்



கவிஞர் அன்னலட்சுமி சரவணன்



ஆகாயத்தில் பறக்கும்
பறவைகள் சிக்கிக்கொண்டன,
புகைப்படக் கருவியில்!

நிழலும் என்னுடன்
சிகை அலங்காரம் செய்கிறது,
நீரோடை ரசிக்கையில்!

அமைதி ஆற்றினில்
அழகு முகத்தைக் காண்கிறது,
வான்நிலா இரவினில்!

அதிகாலை விடியலில்
ஆனந்தக் கச்சேரி,
ஆயிரம் பறவைகள் மரத்திலே!

கோடையில் குளிக்கக்
குவிகிறது கூட்டமாகக் குருவிகள்,
சாலையில் கானல் நீர்!

தலைகுனிந்து தவமிருக்கிறது
மாலையில் மலர்கள்,
சுட்டெரிக்கும் வெயிலில்!

சிலநேரம் சிந்தனைகள்
சிதறித்தான் போகிறது,
மழலைச் சிரிப்பில் அவ்வளவு
கவிதைகள்!

விடுமுறை இல்லாமல்,
விழிகள் மூடாமல்
பயணிக்கிறது அம்மாவும்
அவளின் அடுப்பங்கரையும்!

கவிஞர் கோ. ஏழுமலை, நத்தாமூர்

என் உயிர் மூச்சின்
ஊதா மலரிலிருந்து
கிளம்பும் நறுமணம்,
மேல்வானக் கீழ்க்கரை
அந்திச் சமுத்திரத்தின்
அமைதிப் பெருவெளியில்,
ஒரு பறவையென மேலெழுந்து
கோடொன்று வரைந்து,
என் பெருங்காதலை விளிக்கும்!



கவிஞர் மரு ஜலீலா முஸம்மில், ஏறாவூர் (இலங்கை)

# நீதி எங்கே?

நாள்தோறும் அரங்கேற்றம்
நாட்டிலே நடக்குதே
வேல்கொண்டு குத்திடும்
நேயமற்ற வெறியர்களே!

பாசத்தைத் துறந்து
பண்பினை இழந்தே
வேடத்தை நிரப்பி
வேரறுக்கும் விசமிகளே!

பச்சிளம் குழந்தைகளைப்
பரிதவிக்க வைப்பவர்களே
இச்சைக்காக இரையாவது
இளந்தளிர்களா?

போதை மயக்கத்தில்
பேதைகளும் சீரழியுதே
பதைக்குதே நெஞ்சம்
பரமனே பாராயோ!

பெண் பிள்ளைகளைப்
பொத்திக் காப்பதா?
பொறுமையாய் இருந்து
கொடுமைகளை நோவதா?

கண்ணெதிரே கொடுமைகள்
கழுகுகளாய்ப் பிடுங்குதே
வன்கொடுமை இழைப்போர்க்குத்
தக்கதண்டனை இல்லையோ?



நீதி எங்கே?
வன்மங்கள் இங்கே!
வெகுண்டெழு நீதிதேவதையே
பூவைகளைக் காத்திடு!

மனிதம் எங்கே?
மரணித்துப் போனதோ?
இதயங்கள் அனைத்தும்
இரும்பாய் இறுகியதோ?

கவிஞர் தமிழ்நதி கிருஷ் அபி

# நகல் எழுதிய நிஜத்தின் கதை



தன்னை ஊற்றி
என்னை எழுதியவர்.
கால்ரேகை தேய
ஓடி ஓடியே,
என்னைக்கை யொப்பம்
போட வைத்தவர்.

தாய்க்கு நிகரானவர்,
கடவுளின் உருவானவர்.
என் மகிழ்வே
அவர் வாழ்வு.
நான் வாழ்ந்தால்
அவர் மகிழ்வார்.

அவரின் அக்கறையான
அதட்டலோ,
தாய் அன்பினும்
மேலானது.

கந்தல் அவர் அணிவார்,
நான் மிடுக்காய் உடுத்த
ரசிப்பார்.

அவர் அழுது
நான் கண்டதில்லை.
என் திருமண நாளில்
அவர் உதிர்த்த
கண்ணீர்ப் பூக்களைக்
காணும் வரை.

அவரின் நகல் நானே
என் நிஜம் அவரே.
அப்பா!

கவிஞர் கார்த்திகா மணிகண்டன், கோவை

சந்தோஷங்களின்போது பாராட்டி,
தோல்விக்குத் தோள்தந்து,
பிரச்சினைகளுக்கு ஆறுதல் கூறி,
பணத்தால் முடியாததை
அன்பால் நடத்திக் காட்டி,
நம் சுமைகளைத் தன் சுமையாய்ச்
சுமந்து,
வசதி குறைவானாலும் அன்பை
எமக்கு ஆபரணமாய் அணிவித்து
அழகு பார்த்து,
நம் கண்கலங்கினால்
அவள் மனமுடைந்து,
தன் வாழ்வை அர்ப்பணித்து,
பிறர்முன் எம்மை உயர்த்தி
அழகு பார்க்கும்
ஓர் உன்னதமான உறவே
அம்மா!



கவிஞர் காஜா முகைதீன் பாத்திமா றிம்ஸியா, மூதூர் 01

# பொறையுடைமை

தன்னை அகழ்பவரையும் தள்ளிவிடாமல் தாங்குகிறது நிலம்
உன்னை இகழ்பவரையும் வெறுக்காமல் ஆதரிப்பதே உன் பலம்!

வரம்புகடந்து பிறர்செய்யும் தீமையைப் பொறுத்தல் சிறப்பு
வரமாய் அவற்றை மறத்தல் என்றும் நனிசிறப்பு!

ஆவலோடு விருந்தினரை உபசரிக்காமை வறுமையிலும் வறுமை
கோவலன் குற்றங்களைப் பொறுத்த கண்ணகிமனம் வலிமையிலும் வலிமை!

நற்குணங்கள் தன்னைவிட்டு அகலாது இருக்க விரும்புபவன்,
சற்குணமாய் எப்போதும் பொறுமையைப் போற்ற வேண்டுவனே!

அடுத்தவர் குற்றத்திற்குத் தண்டனை வழங்குவோரை உலகம் மதியாது
அடுக்கடுக்காய்த் தீமைகளைப் பொறுப்பாரையே பொன்போல் உலகம் மதிக்கும்!

தீமை புரிந்தாரைத் தண்டிப்போர்க்கு ஒருநாள் மட்டுமே இன்பம்
ஆமைபோல் அடங்கிப் பொறுப்போர்க்கு வாழ்நாள் முழுதும் பேரின்பம்!

மாற்றான் தமக்குத் தீமை செய்தான் எனினும் வருந்தேல்
ஆற்றல் கொண்டு அறம் புரிதலே என்றும் நன்று!

மனச்செருக்கால் தீமை புரிந்தாரே ஆயினும் அவர்க்கு,
மனமுருகும் வண்ணம் நன்மை செய்யின் வாராது கேடு!

தீயவரின் வெறுக்கத்தக்க செயல்களைப் பொறுப்பவரே,
தூய்மை உள்ளம் கொண்ட துறவியினும் சிறந்தவரே!

உண்ணா நோன்பிருந்து தவம்செய்வார் பெரியர் எனினும்,
கடுஞ்சொல்லைப் பொறுப்பவர் அத்துறவியரினும் நனிபெரியர்!



கவிஞர் குரு. ஜெயந்தி, சிதம்பரம்

அல்லி நகரத்து நடிப்புலக கலைஞன்
துள்ளித் திரிந்தான் இளமையில் கிராமத்தில்
பள்ளியில் பெரிதாய் படித்திலா நிலையிலும்
திரையினில் நடித்த நடிகரை இயக்கினார்.

கிராமத்து கதையில் இயக்கிய பெருமையை
சிரமத்தில் படைத்த படைப்புகள் நிறைந்து
விருப்பத்தில் இணைத்த நடிகைகள் பலரும்
விருதுகள் வென்று வாழ்வினில் உயர்ந்தனர்.



இயக்குனர் சிகரம் பாரதிராஜா இன்று
இறந்த துன்பம் இயற்கையில் நடந்தே..
அஞ்சலி செலுத்தி அனைவரும் சென்ற
அரசின் கடமையில் குண்டுகள் முழங்கியதே.

சிறந்த படைப்பினை வடித்த கலைஞர்
சிறகில்லா பறவையாய் பறந்தார் கலைஉலகில்
விருதுகள் வென்று காட்டிய காலம்
மருந்துகள் போல படைப்பும் நின்றதே.

கவிஞர் முனைவர். இரவி சீனுவாசன், உடுமலை

# என் காதலே என் கணவரே

என் காதலே என் காதலே
எனை விட்டு ஏன் பிரிந்தாய்.
நான் எழுதுவேன் என்று தெரிந்துதான்
எனக்கு வலிகள் மட்டும் கொடுத்தாயா.

வாழ்வதா உன்னுடன் வருவதா
இரண்டில் என்ன தர போகிறாய்.
வலிகளை தந்து விட்டு நீ வானில்
நின்று பார்க்கிறாய்.

காதலே நான் பூ வைத்தால்
உன் மனதும் கொஞ்சம் குழையும்
என் பூவையெல்லாம் நீ மாலையாக்கி
ஏன் உன்னிடம் எடுத்துக் கொண்டாய்?

காதலே என் கண்ணீரில் நீ
கரைந்த கடலும் கரையும்.
நான் வாழ்வதா? இல்லை மீள்வதா?



இரண்டில் என்ன செய்ய போகிறேன்
நீ இல்லாமல் நான் செய்ய போகிறேன்
காதலே உன் கைகோர்த்து
நான் மகிழ்ந்து மகிழ்ந்து போனேன்.

கண்களை நீ மூடிக்கொண்டாய்
நான் கலங்கி கதறிஅழுதேன்.
வந்து விடு என்னிடமே என்று
உன்னிடமே என்று
நான் கதறி கதறி அழுதேன்

என் வாழ்வே தினம் போராட்டமா
என் காதலே என் காதலே
என்னை விட்டு ஏன் பிரிந்தாய்?

நான் எழுதுவேன் என்று தெரிந்து தான்
எனை துன்பத்தில் துடிக்க வைத்தாய்.
வலிகள் வரிகளாக.

கவிஞர் சுமதி தசரதன்

கடும் கோடை காலம்
ஊர் மக்கள் எல்லோரும்
மழை வேண்டி தொழுது பிரார்த்திப்பதற்காய்
ஒரு மைதானத்திற்குச் சென்றனர்
ஒரு குழந்தை மாத்திரம்
தன் கையோடு குடையையும்
எடுத்துச் சென்றது
எப்படியும் மழை பெய்யும் என்ற
நம்பிக்கையில்



கவிஞர் நபீல் இப்னு இஸ்மாயில், நமடகஹவத்த கலேவெல

ஒவ்வொரு வலிகளுக்கு பின்னாலும்
ஒரு ஆரம்பம்
உன் முயற்சியும் உன் உழைப்பும்
ஒருநாள் வெல்லும்
அதை உன் தேசம்
அன்று சொல்லும் முயற்சியே
உன் வாழ்க்கையின் சிகரம்
முடிவில்லா பயணங்களில்
தொடர்போல் அன்று
இறுதிநாள் உன் எல்லை வெல்லும்
அன்றும் உன் பயணம் சொல்லும்
எழுந்து நில் அணிந்து செல் துணிந்து சொல்!



கவிஞர் ம. செல்லமுத்து, பெரம்பலூர் மாவட்டம்

அகம் நனைத்த மருதன் இன்மொழி
இறுக்கம் தளர்த்தி இன்புறல் இனிதே
அறவோன் மொழி ஆக்கம் தர
அவை வெல்லும் ஆய்.



கவிஞர் செ. தமிழ்நேயன், தமிழ்நாடு

## நம்பிக்கை எனும் நகர்வு



சில நம்பிக்கைகள் ஆரம்பத்திலேயே
ஏமாற்றம் ஆகலாம்!
பாதிப் பயணத்திலேயே நொண்டி அடிக்கலாம்!

இறுதிக் கட்டத்தில் கூட பொய்த்துப் போகலாம்!
ஆனால்
அவர்கள் இல்லையெனில் அடுத்த நகர்வு எது?
வாழ்வு அர்த்தப்படுவது எப்படி?

ஆசைகளும் எண்ணங்களும் செயலாக்கத்தினால்
வசப்படுவது எவ்வாறு?
மனித வாழ்வில்!

மனங்களின் எதிர்பார்ப்பு
வேறு வேறு வார்த்தைகளில்.
எதிர்பார்த்து நடந்தால் உள்ளத்தில் உவகை!
அடுத்ததற்கான நம்பிக்கை!
இன்னும் உயரம் போகணும் என ஊக்கம்!

நடக்கவில்லை எனில்
சோகம் நிறையும் மனம்!
என்ன செய்வது என்ற அவநம்பிக்கை!
இப்படியே போனால்
என்னாவது எனப் புலம்பல்!

வெவ்வேறு வார்த்தைகளில் இருந்தாலும்
விரும்புவது மனித மனங்கள் ஒன்றைத்தான்!
*******************************************

## கண நேரச் சந்தோஷம்

அத்தனையும்
பிறர் நாம் விரும்பும்
விஷயத்தைப் பேசினாலும்,
நாம் நிலைப்பாட்டுக்கு
ஆதரவு தெரிவித்தாலும்,
நம் திறமையை, குணத்தை,
பேச்சைப் பாராட்டினாலும்,
நாம் விரும்பியதைக் கொடுத்தாலும்,
நாம் எண்ணியதைச் செயலாக்கினாலும்

கிடைக்கும் சந்தோஷத்தின் அளவு என்பது,
அந்தக் கணத்து நம் மனநிலையைப் பொறுத்தது!

கவிஞர் சுந்தரராஜன், மானாமதுரை

# வறட்சியின் தாக்கம்



வெளிச்சம் நிறைந்த மதிய வேளை. அப்றா குளியலறையிலிருந்து வெளியே வந்தாள். அப்போது காகமொன்று பரபரப்பாகக் கரைந்தது. அவளது தோளருகே உரசியபடி பறந்தது. வார்த்தைகள் இல்லாமலேயே ஏதோ சொல்ல முயற்சிப்பது போல அதன் நடத்தை இருந்தது.

அப்றாவுக்கு என்ன செய்வதென்று புரியவில்லை. "என்னடா உனக்கு? சும்மா சும்மா கரையாமல் போ," என்று அதனுடன் பேசினாள்.

ஆனால், காகம் அமைதியாகாமல் கரைந்துகொண்டே இருந்தது. அவளைத் தொடர்ந்து வந்து, குளியலறைக்கு அருகிலிருந்த நெல்லி மரத்தில் அமர்ந்தும் கரைந்துகொண்டே இருந்தது.

"அப்றா, குளித்து முடிந்தால் சீக்கிரம் வா, சாப்பிடலாம்," என்று உம்மா ராசிதா அழைத்தார்.

"இதோ அம்மா," என்று சொல்லி, அவள் துவைத்து வைத்த ஆடைகளை உதறிக் கயிற்றில் காயவைத்தாள்.

அப்போதும் அவளது பார்வை அந்தக் காகத்தின் மேல் சென்றது. தண்ணீர் நிரப்பி மூடியிருந்த பீப்பாயின் மூடியின் மேல் வைத்திருந்த வெற்றுப் பாத்திரத்தின் வாயில் காகம் அமர முயன்றது. அதன் பாரம் தாங்காமல் பாத்திரம் புரண்டு விழுந்தது. அந்தக் கணத்தில் அப்றாவுக்கு ஒரு பொறி தட்டியது; அது தாகத்தால் தண்ணீருக்காகப் போராடுகிறதோ என்று தோன்றியது.

"அச்சோ... உனக்குத் தண்ணீர் வேண்டுமா? இரு, தருகிறேன்," என்று அவள் மெதுவாகச் சொன்னாள். உடனே ஒரு பாத்திரத்தில் தண்ணீர் நிரப்பி வைத்தாள். ஆனால் அதற்குள், கூரை மூடப்படாத குளியலறையின் உள்ளே எப்போதும் அவள் வைத்திருக்கும் தண்ணீரைத் குடித்துவிட்டுப், காகம் பறந்து போய் பூவரச மரத்தில் அமர்ந்தது.

கவிஞர் சுஹ்னாஸ் பேகம், முதலைப்பாளி (இலங்கை)

அந்த நேரத்தில், "இன்னும் என்ன செய்கிறாய்? வா சாப்பிடலாம்," என்ற உம்மாவின் குரல் கேட்டது. உள்ளே செல்லும் முன், அப்றா தான் பதியம் வைத்திருந்த நிலக்கடலைச் செடிக்கும் தண்ணீர் ஊற்றிவிட்டே சென்றாள்.
கோடை வெயில் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே இருந்தது. மனிதனுக்கே தாங்க முடியாத அந்த உஷ்ணம், மற்ற உயிர்களுக்கு எப்படி இருக்கும்? தண்ணீருக்காக ஏங்கும் நிலை, வாடி நிற்கும் மரங்கள் என இவற்றுக்கான தீர்வு யாருக்குப் புரியும்?
சாப்பிட்டு முடித்ததும், வழக்கம் போல வீட்டினர் ஓய்வெடுக்கத் தத்தமது அறைகளுக்குள் சென்றனர். அப்றா தன் அறைக்குள் சென்று ஜன்னலைத் திறந்து, காற்றைப் பெற முகத்தை வெளியே நீட்டினாள். எங்கும் அசைவில்லாத அமைதி. மனிதர்களைப் போலவே மரங்களும் சோர்ந்து நின்றன.

அவளது மனதில் திடீரென ஒரு நினைவு மின்னியது. தோட்டத்தில் இருந்த நாவல் மரத்தில், ஒரு குருவிக் கூட்டில் இரண்டு முட்டைகள் இருந்தன. பல நாட்களாக அந்தத் தாய்க் குருவி திரும்பி வரவில்லை. இப்போதுதான் அவளுக்குப் புரிந்தது—தண்ணீரின்றி எங்கோ அது உயிரிழந்திருக்கலாம்; அதனால்தான் அந்த முட்டைகள் குஞ்சுகளாக மாறாமல் போயிருக்க வேண்டும். அந்த எண்ணமே அவளது மனதை இறுகப் பிடித்தது.
அப்போது திடீரெனக் குருவிகளின் கீச்சொலி கேட்டது. அவை அவளிடம் தண்ணீர் கேட்பதாக நினைத்த அப்றா, உடனே வெளியே ஓடினாள். முற்றத்தில் தங்கை விளையாடிவிட்டு வைத்திருந்த பாத்திரங்களைத் தேடி எடுத்து, அவற்றில் தண்ணீர் நிரப்பி ஆங்காங்கே வைத்தாள்.
"வறட்சியில் நீர்நிலைகள் வறண்டு போகும்போது, இந்த வாய்பேசத் தெரியாத பறவைகளும் விலங்குகளும் என்ன செய்யும்?" என்று அவள் தன் மனதிற்குள் நினைத்துக்கொண்டாள்.
"முடிந்த அளவுக்கு நம்மால் இயன்ற உயிர்களைக் காப்போம்..." என்று மனதிற்குள் உறுதியாகத் தீர்மானித்தாள்.


கவிஞர் சுஹ்னாஸ் பேகம், முதலைப்பாளி (இலங்கை)

# விவசாயியின் கனவு

## கட்டுரை



ஏர் முனைக்கு நேர் இங்கே எதுவுமே இல்லே
என்றும் நம்ம வாழ்விலே பஞ்சமே இல்லே
பூமியிலே மாரியெல்லாம் சூரியனாலே பயிர்
பூப்பதுவும் காய்ப்பதுவும் மாரியினாலே
பூமியிலே மாரியெல்லாம் சூரியனாலே பயிர்
பூப்பதுவும் காய்ப்பதுவும் மாரியினாலே நாம்
ஷேமமுற நாள் முழுதும் உழைப்பதனாலே நாம்
ஷேமமுற நாள் முழுதும் உழைப்பதனாலே இந்த
தேசமெல்லாம் செழித்திடுது நம்ம கையாலே

நெற்றி வேர்வை சிந்தினோமே முத்து முத்தாக அது
நெல்மணியாய் வௌஞ்சிருக்கு கொத்துக் கொத்தாக
நெற்றி வேர்வை சிந்தினோமே முத்து முத்தாக அது
நெல்மணியாய் வௌஞ்சிருக்கு கொத்துக் கொத்தாக
பக்குவமாய் அறுத்து அதைக் கட்டுக் கட்டாக
பக்குவமாய் அறுத்து அதைக் கட்டுக் கட்டாக அடிச்சுப்
பதரை நீக்கிக் குவிச்சி வைப்போம் முத்து முத்தாக

வளர்ந்து விட்ட பருவப்பெண் போல் உனக்கு வெட்கமா? தலை
வளைஞ்சு சும்மாப் பாக்குறியே தரையின் பக்கமா
வளர்ந்து விட்ட பருவப்பெண் போல் உனக்கு வெட்கமா? தலை
வளைஞ்சு சும்மாப் பாக்குறியே தரையின் பக்கமா இது
வளர்த்து விட்ட தாய்க்குத் தரும் ஆசை முத்தமா? இது
வளர்த்து விட்ட தாய்க்குத் தரும் ஆசை முத்தமா? என்
மனைக்கு வரக் காத்திருக்கும் நீயும் சொத்தம்மா?

- இயற்றியவர்: மருதகாசி

"உலகம் பல தொழில் செய்து சுழன்றாலும் ஏர்த் தொழிலின் பின் நிற்கிறது; அதனால் எவ்வளவு துன்புற்றாலும் உழவுத் தொழிலே சிறந்தது; உழவு செய்ய முடியாமல் உயிர் வாழ்கின்றவர் எல்லாரையும் தாங்குவதால், உழவு

கவிஞர் இரஜகை நிலவன், மும்பை

செய்கின்றவர் உலகத்தார்க்கு அச்சாணி போன்றவர்; உழவு செய்து அதனால் கிடைத்ததை உண்டு வாழ்கின்றவரே உரிமையோடு வாழ்கின்றவர்; மற்றவர் எல்லோரும் பிறரைத் தொழுது உண்டு பின் செல்கின்றவரே!" என்று உழவின் பெருமையையும் மேன்மையையும் திருவள்ளுவப் பேராசான் போற்றிக் கூறியிருக்கிறார்.

ஆனால் அதற்கு ஒரு படி மேலே சென்று உலக மக்கள் அனைவருக்கும் முதுகெலும்பாக இருக்கும் உழவுத் தொழிலின் தனிச்சிறப்பை இரு நூல்களின் வாயிலாக எடுத்துக் கூறியுள்ளார் கவிச்சக்ரவர்த்தி கம்பர்.

கம்பர் என்று கூறினாலே "கம்பராமாயணம்" ஒன்றுதானே அனைவருக்கும் நினைவுக்கு வருகிறது. ஆனால் அவர் எழுதிய ஒன்பது நூல்களுள், வேளாளர் மரபைப் போற்றி, பொருளாதாரத்தைப் புகழ்ந்துரைக்கும் அதியற்புதமான இரு நூல்கள்தான்; "ஏர் எழுபது" மற்றும் "திருக்கை வழக்கம்"

கம்பர் பாடியதாகக் கருதப்படும் "ஏர் எழுபது", வேளாளர் தம் சிறப்பையும், உழவுத் தொழிலின் மாண்பையும் கூறுகிறது. மற்றது, 59 கண்ணிகளைக் கொண்டு, வெண்டளையால் வந்த கலிவெண்பாவால் பாடப்பட்ட "திருக்கை வழக்கம்" என்ற நூல், வேளாண் பெருமக்களின் கொடை குணத்தைச் சிறப்பிக்கிறது. திருக்குறள் வழிநின்று பாராட்டி, ஏர்த்தொழில் பற்றிய நுட்பமான செய்திகளை விரித்துரைக்கிறது. "ஏர் எழுபதை"ப் பாடியதையொட்டி "திருக்கை வழக்கத்தை"யும் கம்பர் பாடியதாகக் கூறுவர்.

இந்நூல்கள் தோன்றியதற்கான சூழல், படித்து இன்புறத்தக்கது. கம்பர், குலோத்துங்கன் அரசவையில் வீற்றிருந்தபோது ஒருநாள், குலோத்துங்கன் சப்தமிட்டுச் சிரித்துவிட்டான். இதைக் கண்ட கம்பர், "அரசே! எதனால் இப்படிச் சிரித்தீர்கள்? காரணத்தைச் சொன்னால் உங்கள் மகிழ்ச்சியில் நாங்களும் பங்கு பெறலாமே?" என்றார்.

கவிஞர் இரஜகை நிலவன், மும்பை

"கம்பரே, நீரும் எமது பிரஜைகளும் எனக்கு அடிமைகள்தானே என்று நினைத்துச் சிரித்தேன்" என்று குலோத்துங்கன் கூறியவுடன் கம்பருக்கு கடும் சினம் எழுந்தது.

"என்ன சொன்னீர்? நானும் உமது அடிமை என்றா கருதுகிறீர்? இது ஒப்பாது. அரசே! நீவிர் புவிச்சக்ரவர்த்தி, நானோ கவிச்சக்ரவர்த்தி. உமக்கு நான் அடிமையாகேன்?" என்று கூறி அவையை விட்டு கிளம்ப முயன்றார்.

உடனே குலோத்துங்கன், "கம்பரே! நீவீர் கவிச்சக்ரவர்த்தியாய்த் திகழ்வது எனது சமஸ்தானத்தில்தான். மற்ற தேசத்தில் உமக்கு இத்தகைய பெருமை கிடைக்காது" என்று கூறியதும் கம்பர் மனம் பொறுக்காதவராய்,

"கொல்லிமலைத் தேன்சொரியும் கொற்றவா
நீ முனிந்தால் இல்லையோ எங்கட்கிடம்?" என்று கூறிக் கொண்டே அணிகலன்களைக் கழற்றிவைத்துவிட்டு வெளியேற நினைத்தார்.

இதைக்கண்ட அரசன், மேலும் பல கடினமான வார்த்தைகளைக் கூறியதைக் கேட்ட கம்பர், "மன்னவனும் நீயோ? வளநாடும் உனதோ?" என்ற பாடலைப் பாடி, அவையைவிட்டு வெளியேறினார்.

அவ்வாறு அவையைவிட்டு வெளியேறிய கம்பர், நீண்ட தூரம் நடந்த களைப்பு. அப்போது அவர் பார்வையில் பட்டது அக்காட்சி. தூரத்தில் பழையது கரைத்த மோரை எடுத்து வந்த மனைவி உழுது கொண்டிருந்த உழவனுக்குக் கொடுத்துக்கொண்டிருந்தாள். தாகம், பசி மேலீட்டால் கம்பர் தானும் அங்கு சென்று கையை நீட்டினார். இதைக் கண்ட வேளாளன் வழிப்போக்கனான கம்பருக்கு அந்த மோர்க் குவளையைத் தந்து பசியாறச்செய்தான். மோர் பருகி வயிறு நிரம்பியதும் இந்தக் வேளாளனுக்கு என்ன கைம்மாறு செய்யப்போகிறேன் என்று கூறி, தன்னால் இயலக்கூடிய கைம்மாறு ஒன்றுதான் உண்டு. அதுதான் கவி. என நினைத்தவர் உடனே,

கவிஞர் இரஜகை நிலவன், மும்பை

"செட்டிமக்கள் வாசல் வழி செல்லோமே செக்காரர்
பொட்டி மக்கள் வாசல் வழி போகோமே,
முட்டிபுகும் பார்ப்பார் அகத்தை எட்டிப்பாரோமே
எந்நாளும் காப்பாரே வேளாளர் காண்!"

என்ற கவியொன்றை அப்போதைக்குப் பாடிவிட்டுத் தம் பயணத்தைத் தொடர்ந்தார்.

தனது பசியையும், தாகத்தையும் தீர்த்த வகையை நினைத்தும், தான் குடிக்கப்போன மோரைக் குடிக்காமல் கை நீட்டியவுடன் தனக்கு அப்படியே தந்த அன்பான வேளாளனின் கையின் மகத்துவத்தையும் எண்ணி எண்ணி மனமுருகினார் கம்பர்.

உடனே அவருக்கு ஏற்பட்ட உணர்ச்சி பெருக்கின் வெளிப்பாட்டின் படைப்புதான் "ஏர் எழுபது" என்ற வேளாளர் புகழ்ச்சி நூலாகும். உழவன் மற்றும் உழவுத் தொழிலின் மேன்மையை இதன் மூலம் உலகறியச் செய்து தனது நன்றியைத் தெரிவித்துவிட்டார் கம்பர்.



கட்டுரை தொடரும்..

கவிஞர் இராஜகை நிலவன், மும்பை

கட்டுரை

### முன்னுரை



"யான் ஒரு தமிழ் மாணவன்" என்று தன் கல்லறையில் எழுதச் சொன்னவர் ஜி.யு. போப். வெளிநாட்டில் பிறந்து, சமயப் பணிக்காகத் தமிழகம் வந்து, தமிழ் மொழியின் பால் ஈர்க்கப்பட்டு, தன் ஆயுள் முழுவதையும் தமிழ் மொழிக்காகவே செலவிட்ட ஒரு உன்னதமான அறிஞர் அவர்.

### பிறப்பும் இளமைப் பருவமும்

ஜி.யு. போப் அவர்கள் 1820 ஆம் ஆண்டு ஏப்ரல் 24 அன்று கனடா நாட்டில் உள்ள நோவாஸ்கோஷியா என்னும் தீவில் பிறந்தார். இவருடைய பெற்றோர் ஜான் போப், கேதரின் போப் ஆவர். பின்னர் இவருடைய குடும்பம் இங்கிலாந்திற்குக் குடிபெயர்ந்தது. அங்கேயே இவர் கல்வி பயின்றார். கிறிஸ்தவச் சமயத்தைப் பரப்புவதற்காகத் தன்னைத் தயார்படுத்திக் கொண்டார்.

### தமிழக வருகையும் தமிழ் கற்றலும்

தமது 19ஆம் வயதில், சமயப் பணி ஆற்றுவதற்காக 1839 ஆம் ஆண்டு சென்னைக்கு வந்தார். தமிழகம் வந்த போப், இங்கிருந்த மக்களிடம் சமயப் பணி செய்ய வேண்டுமானால் தமிழ் மொழியைச் சிறப்பாகக் கற்க வேண்டும் என்பதை உணர்ந்தார்.

அவர் சாந்தோம், தூத்துக்குடி, சாயர்புரம், தஞ்சாவூர், உதகமண்டலம் போன்ற இடங்களில் தங்கிப் பணியாற்றினார். இராமானுச கவிராயர் போன்ற தமிழறிஞர்களிடம் முறையாகத் தமிழ் இலக்கண, இலக்கியங்களைக் கற்றுத் தேர்ந்தார்.

திரு அ. வில்சன், இதழாசிரியர்

## தமிழ்த் தொண்டும் மொழிபெயர்ப்புகளும்

தமிழ் மொழியின் தொன்மையும், அதில் உள்ள அறக்கருத்துகளும் போப்பை நெகிழச் செய்தன. மேலைநாட்டினர் தமிழின் பெருமையை அறிந்துகொள்ள வேண்டும் என்பதற்காகப் பல உன்னதமான தமிழ் நூல்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார்.

**திருக்குறள் மொழிபெயர்ப்பு:** போப் அவர்களின் மிகச் சிறந்த சாதனை, உலகப் பொதுமறையான திருக்குறளை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து 1886 இல் வெளியிட்டதாகும். இதன் மூலம் வள்ளுவரின் சிந்தனைகள் உலக அரங்கிற்குச் சென்றன.

**திருவாசகம் மொழிபெயர்ப்பு:** "திருவாசகத்திற்கு உருகார் ஒரு வாசகத்திற்கும் உருகார்" என்ற பழமொழியை உணர்ந்த போப், தன் 80ஆவது வயதில் (1900 ஆம் ஆண்டு) திருவாசகத்தை முழுமையாக ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து வெளியிட்டார். இதன் முன்னுரையில், "இதனைப் படிக்கும்போது என் கண்கள் பனித்தன, இதயம் உருகியது" என்று குறிப்பிட்டுள்ளார்.

**இதர நூல்கள்:** நாலடியார், புறநானூறு மற்றும் புறப்பொருள் வெண்பாமாலை ஆகியவற்றின் சில பாடல்களையும் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார். மேலும், ஆங்கிலேயர்கள் தமிழ் கற்க ஏதுவாகப் பல தமிழ் இலக்கண நூல்களையும் (Tamil Handbooks) எழுதினார்.


## மொழிபெயர்ப்பு


1886ஆம் ஆண்டு திருக்குறளை The Sacred Kural என்று 1,330 குறள்களையும் முதன்முதலாக முழுமையாக ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார்.

திரு அ. வில்சன், இதழாசிரியர்

**விருதுகள்**

உதகையில் அவரது கல்விப் பணிக்காக இங்கிலாந்தின் கந்தர் புரி அத்தியட்சர் 'மறைநூற் புலவர்' எனும் பட்டம் அளித்தார். தமிழக அரசு சென்னை மெரினா கடற்கரையில் உருவச்சிலை அமைத்து கவுரவப்படுத்தியுள்ளது .




**இறுதி நாட்களும் மரணமும்**

ஜி.யு. போப் அவர்கள் 1908 ஆம் ஆண்டு பிப்ரவரி 11 அன்று தமது 88 ஆவது வயதில் காலமானார். அவர் இறப்பதற்கு முன்னால், தன் கல்லறையில் "இங்கே ஒரு தமிழ் மாணவன் உறங்கிக் கொண்டிருக்கிறான்" (Here lies a Tamil Student) என்ற வாசகம் இடம்பெற வேண்டும் என்று விரும்பினார். அவரது விருப்பப்படியே லண்டனில் உள்ள அவரது கல்லறையில் அவ்வாறே எழுதப்பட்டுள்ளது.

**முடிவுரை**

தமிழ்நாட்டிலேயே பிறந்து வளர்ந்த பலரே தமிழின் சிறப்பை உணராத காலத்தில், கடல்கடந்து வந்து தமிழ் படித்து, அதன் பெருமையை உலகறியச் செய்தவர் ஜி.யு. போப். அவரது தமிழ்ப் பற்றும், உழைப்பும், அர்ப்பணிப்பும் உலகெங்கிலும் உள்ள தமிழர்களால் என்றும் நன்றியோடு நினைவுகூரத்தக்கவை. தமிழினம் வாழும் வரை ஜி.யு. போப்பின் பெயரும் புகழும் நிலைத்து நிற்கும்.

திரு அ. வில்சன், இதழாசிரியர்

நாளை

# நமதே

மனதில் தூய்மையும்,

லட்சியத்தில் உறுதியும்

இருந்தால்

வாழ்க்கைப் பெருங்கடலை

வெல்வது

மிக எளிது!

அகமும் தமிழே                முதலும் தமிழே

"தனித்தியங்கும் தன்மை தமிழினுக் குண்டு
தமிழே ஞாலத்தில் தாய்மொழி பண்டு
கனிச்சாறு போற்பல நூலெலாம் கண்டு
காத்ததும் அளித்ததும் தமிழ்செய்த தொண்டு"

என்றும் தலைப்பணியாம் தமிழ்ப்பணியில,

அகர முதல செய்திக்குழு    அகர முதல இலக்கியப் பேரவை
அகர முதல கல்விக்குழு    சிவம் அறக்கட்டளை

தொடர்பிற்கு :

9597887847
8870884969



# அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa    www.aagaramuthala.com    aagaramuthala@gmail.com